


# முஸ்லிம்கள் அரசியல் அதிகாரம் பெற வழி என்ன?

இந்திய அளவில் மாறிவரும் சமூக அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு முஸ்லிம் சமூகத்திலும் பல மாற்றங்கள் எற்பட்டு வருகின்றது. சமீப காலமாக முஸ்லிம் சமுதாயத்தில் புதிது புதிதாக பல அரசியல் கட்சிகள் உருவாகி வருகின்றன. பல ஆண்டுகளாக சமுதாய இயக்கங்களாக இருந்து பல்வேறு சமூக பணிகளில் கவனம் செலுத்தி வந்த அமைப்புகள் கூட தேர்தல் அரசியல் பாதைக்கு திரும்பியுள்ளன. சமூக அமைப்புகளாக இருந்த நேரத்தில் அரசியல் ஒரு சாக்கடை என்றும் அது கொடியவர்களின் கூடாரம் என்றும் ஜனநாயகம் இஸ்லாத்திற்கு எதிரானது என்றும் அரசியலில் ஈடுபட்டு வந்த இஸ்லாமிய அரசியல் கட்சிகளை, தனி நபர்களை, பிற கட்சிகளில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகளை ஜோக்கர்களாக பாவித்ததை யெல்லாம் கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் கண்டது.

அரசியலில் ஈடுபட்டு ஓரளவிற்கு வெற்றிடத்தை நிரப்பியவர்களையெல்லாம் விமர்சனம் செய்தார்கள். இப்பொழுது பக்குவப்பட்டு காலத்தை உணர்ந்து தேர்தல் அரசியல் பாதைதான் சரியான தீர்வு என்பதை உணர்ந்துள்ளனர். வரவேற்போம். இதுதான் சரியான முடிவு என்று பாராட்டுவோம். வெற்றிபெற வாழ்த்துவோம். அதே நேரத்தில் இப்படி புதிதாக தேர்தல் அரசியல் பாதைக்கு வந்தவர்களால் இன்றையச் சூழலில் என்ன சாதித்துவிட முடியும், எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திட முடியும் 60 ஆண்டு காலமாக பெற இயலாமல் போன அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கு என்ன வழி என்பதை சற்று விரிவாக வரலாற்று ரீதியாக நாம் அலசி பார்பது நல்லது.

இந்தியா என்ற இந்த பரந்து விரிந்த தேசம் எந்த காலத்திலும் ஒரே நாடாக இருந்ததில்லை. அதாவது ஒரு கலாச்சாரம், மொழி, இனம், மதம் சார்ந்து எப்போதும் இருந்ததில்லை. இப்போதும் இல்லை. நீண்ட நெடிய இந்திய வரலாற்றில் ஆட்சிமுறைகள் காலத்திற்கேற்ப பல மாறுதல்களை கண்டுவந்துள்ளது. வெள்ளையர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்திய பிறகுதான் **Rule of Law** என்ற சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம், மக்களாட்சி, மதச்சார்பின்மை, பாராளுமன்றம், சட்டமன்றம் என்பன போன்ற ஆட்சி முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டன.

நாடு விடுதலைக்குப் பிறகு வரையறுக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. நாட்டின் மிக உயர்ந்த பீடமாக பாராளுமன்றம்,

சட்டமன்றம் போன்றவை செயல்பாட்டிற்கு வந்தது. வயது வந்த எல்லோர்க்கும் வாக்களிக்கும் உரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. விடுதலைக்கு முன்பு எல்லோர்க்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவில்லை. நாடு விடுதலை பெறும் வரையிலும் இப்போது இருப்பது போன்று ஆட்சிமுறைகளை முன்பு எப்போதும் கண்டிராத இந்திய மக்கள் விடுதலைக்குப் பிறகான ஆட்சி முறையைக் கண்டு சற்று திகைத்து நின்றனர். ஊர் கூடி தேர் இழுப்பது என்பது போல எல்லோரும் வாக்களித்து இந்த நாட்டின் ஆட்சியாளர்களை தேர்வு செய்வது என்ற அரசியலமைப்புச் சட்டத்தின் உரிமை சகலருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நேரத்தில் இந்தியாவில் தன்னாட்சி பெற்ற சமஸ்தானங்கள் பல இருந்தன. தமிழகத்தில் புதுக்கோட்டை, இராமநாதபுரம், வடக்கே ஹைதராபாத், காஷ்மீர் போன்று இந்தியா முழுவதும் 565 சுய உரிமை பெற்ற சமஸ்தானங்கள் இருந்தன. இவர்கள் அனைவரும் வெள்ளையர்க்கு கப்பம் கட்டி தங்களது ஆட்சியின் நிலப்பரப்புகளை காப்பாற்றி ஆண்டு வந்தனர்.

இந்தியா விடுதலை பெற்றபிறகு இந்த சமஸ்தானங்கள் அனைத்தும் இந்திய யூனியனோடு இணைக்கப்பட்டன. இந்த சமஸ்தானங்களை ஆண்ட குறுநில மன்னர்களுக்கும் அவர்களது வாரீசுகளுக்கும் பாராளுமன்ற தேர்தலில் போட்டி யிட்டு வெற்றி பெறும் வாய்ப்புகள் அனைத்தும் சாதகமாக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதின் அடிப்படையில்தான் அந்த சமஸ்தானங்கள் இந்திய யூனியனோடு இணைக்கப்பட்டன என்றும், அரசியல் அமைப்புச் சட்டத்தை வடிவமைக்கின்ற நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கலாம் என்ற விவாதம் நடக்கையில் இந்தியா 565 சமஸ்தானங்களாக இருப்பதை வைத்துத்தான் 550 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கலாம் என்று முடிவு செய்தார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அது உண்மையென்றால் ஏற்கனவே குறு நில மன்னர்களாக ஜமீன்தார்களாக இருந்து ஏழை, எளிய, உழைக்கும் மக்களை ஏமாற்றி, சுரண்டித் தின்றவர்களுக்குத்தான் பாராளுமன்றத்தில் இடம் என்பதாக எடுத்துக்கொள்ள முடியும்.இன்று வரையிலும் அதுதான் நடந்து வருகிறது என்று விபரமரிந்தவர்கள் விமர்சிப்பதை அவ்வளவு எளிதில் நாம் புறந்தள்ளிவிட முடியாது.

## அரசியல் அதிகாரம்:

இந்திய நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியல் அதிகாரத்தின் பலன்கள் கிடைக்கப்பட வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்; நாட்டில் வாழும் அனைத்து பிரிவு மக்களுக்கும் அரசியல் அதிகாரம் கிடைக்க வேண்டும்; அனைத்துப் பிரிவினரின் உண்மையான பிரதிநிதிகள் சட்டமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் செல்ல வேண்டும் என்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்தின் சாரம்.அது தான் மக்களாட்சி தத்துவம்.

ஒவ்வொரு 5 ஆண்டிற்கும் தேர்தல் நடத்தப்பட்டு பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டமன்றத்திற்கும் மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்பது விதி. அதனடிப்படையில்தான் இன்றைக்கு நடைமுறையில் உள்ள தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இப்படியெல்லாம் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு, பாராளுமன்ற, சட்டமன்றம் அமைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப் பட்டு 60 ஆண்டுகளை கடந்து வந்துவிட்டோம். இத்துணை ஆண்டுகளில் அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மையான தத்துவமான அனைத்து தரபினருக்கும் அரசியல் அதிகாரம்ணி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்பது சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. நாட்டில் நடைபெற்று வருகின்ற சம்பவங்களை வைத்துப் பார்த்தாலே தெரிந்துவிடும். பெருவாரியான ஒடுக்கப்பட்ட இனங்கள், சிறுபான்மைச் சமூகங்கள் இன்னமும் அரசியல் அதிகாரத்தை பார்க்காத, நுகராத

சமூகங்களாகவே இருந்து வருகின்றன. நாட்டின் வளர்ச்சியின் பலன்களை அனுபவிக்காத சமூகங்களாக விரக்த்தியின் விளிம்பில் வாழ்ந்து வருகின்றனர். அதை மாற்றி எல்லா இணைத்தவருக்கும் சம வாய்ப்பு என்ற நிலையை உருவாக்க வேண்டும்.எல்லா சமூகங்களுக்கும் அவர்களின் உண்மையான பிரதிநிதிகள் ஆட்சி பீடங்களுக்கு சென்றிட வேண்டும். அது சாதி பிரிவு சமூகமாகட்டும் மத பிரிவு சமூகமாகட்டும். அந்தந்த மக்களுக்காக போராடக்கூடியவர்கள், குரல் கொடுக்கக்கூடியவர் களுக்கு பாராளுமன்றத்திலும் சட்ட மன்றத்திலும் வாய்ப்பு கிடைத்திட வேண்டும். அதுதான் முழுமைபெற்ற ஜனநாயகம் ஆகும். அப்போதுதான் அனைத்து மக்களுக்கும் நாட்டின் இறையாண்மை யின் மீதும் ஆட்சி முறையின் மீதும் நம்பிக்கை வரும்.

ஆனால் இது வரையிலும் நடைமுறைப் படுத்தப்பட்ட தேர்வு முறையில் இது சாத்தியமாக வில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் மைய கருத்தை இதுவரையிலும் முழுமையாக நிலைநிறுத்த இயலவில்லை என்பது தெளிவாகிறது. அதற்கு காரணம் விடுதலை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ள இந்த தேர்தல் முறை தான். ஆக அரசியலமைப்புச் சட்டம் கொடுத்திருக்கின்ற உரிமைகள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் முழுமையாக சென்றடைய வேண்டுமானால் - ஜனநாயகம் முழுமைப்படுத்தப்பட வேண்டுமானால் - இன்றைக்கு இருக்கின்ற இந்தத் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதைத் தவிர வேறுவழி இல்லை.

இன்றைக்கு உள்ள தேர்தல் நடைமுறையில் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளாகப் பிரித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பிலும் சுயேட்சையாகவும் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஒரு தொகுதியில் 10 நபர்கள் அல்லது அதற்கு மேலும் போட்டியிடுகின்றனர். அதிக ஓட்டுக்கள் வாங்கி முதலில் வருபவர் வெற்றி பெறுகிறார். இப்படித்தான் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தல் முறையில் உள்ள குளறுபடிகளை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். உதாரணத்திற்கு ஒரு பாராளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியில் 2 லட்சம் வாக்காளர்கள் இருக்கிறர்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த தொகுதியில் போட்டியிட்டு அதிக ஓட்டு வாங்கி வெற்றி பெற்ற வேட்பாளர் 45 ஆயிரம் ஓட்டுக்கள் வாங்கியுள்ளார் என்றால் அவரைத்தான் வெற்றிபெற்றவராக அறிவிப்பார்கள். அதைத் தவிர்த்து மீதமுள்ள 1.55 லட்சம் வாக்குகள் (பதிவு ஆகாத வாக்குகளையும் சேர்த்து) வெற்றி பெற்ற வேட்பாளருக்கு எதிரான வாக்குகளாக இருக்கின்றது. அப்படியென்றால் ஒரு தொகுதியில் அதிக மக்கள் வெறுக்கும் ஒருவர் வெற்றி பெற்ற வேட்பாளராக அறிவிக்கப்படுகிறார். கடந்த 60 வருடங்களில் நடைபெற்ற சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தல்கள் இந்த கோமாளித்தனமான முறையில்தான் நடைபெற்றுள்ளன. குறைவான வாக்குகள் பெற்றவர்களே நாடாளும் கூத்து உலகில் நம் நாட்டிலும் இந்த தேர்தல் முறையை நமக்கு அறிமுகப்படுத்திய இங்கிலாந்திலும்தான் நடைபெறுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள இந்த தேர்தல் முறையால் பெரிய, சிறிய அரசியல் கட்சிகள் என அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன. சென்ற நாடாளுமன்ற தேர்தலில் 39+1=40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. ஆனால் அ.இ.அ.தி.மு.க கூட்டணிக்கு 1 கோடி வாக்குகள் கிடைத்தது. 4 கோடி தமிழக வாக்காளர்களில் 1 கோடி வாக்காளர்கள் அ.இ.அ.தி.மு.கவிற்கு வாக்களித்திருந்தனர். ஆனால் அந்தக் கூட்டணிக்கு என்று நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லை. ஆக 1கோடி வாக்குகளும் வீண் ஆனது. அதே போல சட்டமன்றத் தேர்தலில் விஜயகாந்த் கட்சிக்கு 29 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. ஆனால் அவர் ஒருவர் மட்டுமே சட்டமன்ற உறுப்பினர். இந்த குளறுபடிகள் நிறைந்த தேர்தல் முறையால் எல்லா தொகுதிகளிலும் பெரும்பான்மை மக்களின்

வாக்குகள் புறந்தள்ளப்படுகின்றன. இதனால்தான் வாக்களிக்கும் மக்களின் சதவீதம் 60ஐ தாண்டுவதில்லை. 40 விழுக்காடு மக்கள் வாக்களிப்பதை வெறுக்கின்றனர்.

மக்கள் யாரை விரும்புகின்றனரோ அல்லது யார் மக்கள் பிரச்சனைக்கு குரல் கொடுக்கின்றனரோ, போராடுகின்றனரோ அவர்கள் வெற்றி பெறுவதற்கு தற்போதைய தேர்தல் முறையில் வாய்ப்பு இல்லை. விரும்புகின்ற வேட்பாளருக்கோ, கட்சிக்கோ வாக்களிக்க வழியில்லை என்பதால்தான் 40 விழுக்காடு மக்கள் வாக்களிப்பதை தவிர்க்கின்றனர்.

பணபலம், தொ(கு)ண்டர் பலம் உள்ள அரசியல் கட்சிகள் எப்படியாவது தேர்தலி ல் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தனக்கு வேண்டப்பட்ட நபரை நிற்க வைத்து மிரட்டி, உருட்டி, எல்லா தார்மீக நெறிகளையும் காலில் போட்டு மிதித்து, மதவெறி, சாதி வெறியைத் துாண்டி, கள்ள ஓட்டு போட்டு, வாக்குச் சாவடிகளை முற்றுகையிட்டு தங்களது உண்மையான குணங்களைக் காட்டி வெற்றி பெறுவதையே வழக்கமாக வைத்துள்ளனர். இதன் காரணமாக இன்றைய அரசியலில் குற்றவாளிகள் அதிகம் வலம் வருகின்றனர்.

இந்த நிலையில் நாட்டில் மக்கள் தொகையில் குறைவாக இருக்கும் சமூகங்கள்-இனங்கள் தங்களுக்கான உண்மையான பிரதிநிதிகளை எப்படி தேர்வு செய்ய முடியும்? பெரிய கட்சிகளின் அரவணைப்பில் உள்ளவர்கள் தங்களது சமூகங் களின் உரிமைகளை அடகு வைத்துவிட்டு அந்த பெரிய கட்சிகளின் சின்னத்தில் அவர்கள் கொடுக் கின்ற ஒன்று அல்லது இரண்டு சீட்டில் நின்று வெற்றி பெறுவதையே விரும்புகின்றனர். இதனால் தனது சமூகத்தின் கருத்துக்களை, உரிமைகளை, வாழ்வாதார கோரிக்கைகளை எந்தச் சூழ்நிலை யிலும் அரசியல் அவைகளில் இவர்களால் எழுப்ப இயலாமல் போகிறது.

இத்தகைய சூழல் உருவாகும் என்பதால்தான் அரசியலமைப்புச் சட்ட நிர்ணய அவையிலேயே கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் இந்த தேர்தல் முறையை கடுமையாக எதிர்த் தார்கள். அரசியல் அமைப்புச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகும் பல முறை நாடாளுமன்றத்தில் நம் நாட்டிற்கு பொருந்தாத தேர்தல் முறை இது என்று வாதிட்டார்கள். 1965ல் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது காங்கிரஸ் கட்சியை பார்த்து நீங்கள் குறைவான வாக்குகள் பெற்றே மூன்று முறை ஆட்சியில் அமர்ந்துள்ளீர்கள் அதற்கு காரணம் இந்த தேர்தல் முறை. இது மக்களுக்கு செய்யும் அநீதி.

ஆகையால் வெள்ளையர்கள் அறிமுகப்படுத்திய நமது நாட்டிற்கு பொருந்தாத இந்த தேர்தல் முறையை மாற்றிவிட்டு விகிதாச்சார பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று காட்டமாக உரையாற்றியுள்ள செய்திகள் பாராளுமன்ற அவைக்குறிப்பில் பதிவாகியுள்ளது. மேலும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் என்ற முழக்கமானது இந்திய அரசியலில் ஒரு புதிய கோரிக்கை அல்ல.கடந்த 60 ஆண்டுகளாக இடது சாரிகள், தமிழ் தேசிய அமைப்புகள், பா.ம.க., தி.மு.க., ம.தி.மு.க., தலித் அமைப்புகள், என்று பல்வேறு சமூக அமைப்புகளும் கட்சிகளும் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி வந்துள்ளன. இன்றைய தேர்தல் முறையை முழுமையாக மாற்றவேண்டும் அல்லது பகுதி அளவிற்காவது மாற்ற வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன.

<u>பகுதி அளவில் மாற்றம்</u>

1950 ஜனவரி மாதம் 26 முதல் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளது. 1950ல் இந்திய மக்கள் தொகை 45 கோடி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 550க்குள் இருந்தது. 2009இல் இந்திய மக்கள் தொகை 110 கோடி இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதே 550க்குள்தான் இருக்கிறது. அரசியல் அதிகாரம் எல்லாத் தரப்பினருக்கும் கிடைக்கின்றது என்று காங்கிரஸ் கட்சி வாய்கூசாமல் பேசுகிறது. அதிக நாட்கள் காங்கிரஸ்தான் ஆட்சி செய்தது. மக்களை முட்டாளாக்கி காங்கிரஸ் கட்சி

விரும்புகின்றவர்களே அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற சூழ்ச்சிதான் இது. அதே போன்று தமிழகத்தைப் பார்ப்போம். 1956இல் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு தமிழக மக்கள் தொகை 3 கோடி. சட்டமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கை 226. இப்போது 2009ல் தமிழக மக்கள் தொகை 6 3/4 கோடி ஆனால் சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 234. அதாவது கடந்த 53 ஆண்டுகளில் வெறும் 8 இடங்கள் தான் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. போதாக்குறைக்கு மேல் சபையும் கலைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முதலில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு தற்போது ஜனநாயகம் மலர்ந்துள்ள அண்டை நாடான நேபாளத்தில் 3 கோடி மக்களுக்கு 600 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அங்கே 50 சதவிகித இடங்கள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு நமது நாட்டில் உள்ளது போன்ற தேர்தல் முறையும் மீதமுள்ள இடங்களுக்கு கட்சிகள் வாங்குகின்ற வாக்குகள் அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்வு செய்யப் படுகின்றனர். அதாவது விகிதாச்சார பிரதிநிதித்துவம். இதே போன்ற நமது நாட்டின் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அதிகப்படுத்தி அந்த அதிகப்படுத்தப் பட்ட இடங்களுக்கு எல்லா சமூகங்களின் மக்கள் தொகைக்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

முழுமையாக தேர்தல் முறையை மாற்ற உடனடியாக இயலாது என்றால் பகுதி அளவிற் காவது மாற்றிடும் விதமாக உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திட வேண்டும். இந்திய சட்டக் கமிஷனும் 25% நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திட வேண்டும் என்று கருத்து சொல்லியிருக்கிறது. (பார்க்க: பெட்டிச் செய்தி)

விடுதலைக்குப் பிறகான இந்திய அரசியல் அவையில் நாட்டின் இரண்டாவது பெரும்பான்மை சமூகமான முஸ்லிம் சமூகத்தின் நிலை அரசியல் அதிகாரம் என்றால் என்ன? என்று கேட்கும் அளவில்தான் உள்ளது. முஸ்லிம் அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளும் சமுதாயத்தில் எந்த வகையிலும் மாற்றம் வந்துவிடக் கூடாது என்பதற்காக பெரிய கட்சிகளை சார்ந்தே காலத்தை ஓட்டிவிட வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றனர். அரசியல் அதிகாரம் கிடைக்கப் பெறாததால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியோ, எதிர்கால தலைமுறை பற்றியோ சிந்தித்துப் பார்க்கக்கூட அவர்களுக்கு நேரமுமில்லை துணிச்சலுமில்லை. தமிழக அளவிலும் சரி இந்திய அளவிலும் சரி தேர்தல் முறையில் மாற்றம் ஏற்பட்டாலே ஒழிய முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய ஒடுக்கப்பட்ட இனங்களுக்கும் அரசியல் அதிகாரம் என்பது கானல் நீராகவே இருக்கும்.

தமிழகத்தில் உள்ள சட்டமன்ற நாடாளுமன்ற தொகுதிகள் மறு சீரமைப்புக்கு பிறகு எந்த தொகுதியும் முஸ்லிம்கள் தனிப் பெரும் மெஜாரிட்டியாக இருக்கின்ற தொகுதிகளாக இல்லை. கூட்டணி கட்சிகளின் உதவியாலும் பெரிய கட்சிகளின் தயவாலும்தான் வெற்றி பெற முடியும் அல்லது அப்படி ஒத்துழைக்கின்ற முஸ்லிம் கட்சிகளை மட்டும்தான் கூட்டணியிலும் சேர்ப்பார்கள் என்பதுதான் உண்மை நிலவரம்.

முஸ்லிம் சமூகம் சற்று ஆழமாக இன்றைய அரசியல் நிலவரங்களை நன்றாக அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.தான் சார்ந்துள்ள கட்சிக்கு எது நல்லது என்று பார்க்காமல் தனது சமூகத்திற்கு எது சரி என்று பார்க்கவேண்டும். அடுத்த தலைமுறைக்கு எது சரியாக நல்லதாக இருக்கும் என்று பார்க்க வேண்டும். இந்த நாட்டில் ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது இரண்டு வழிமுறைகளால் தீர்மாணிக்கப்படுகின்றது. ஒன்று அந்த சமூகம் பெறுகின்ற அறிவு - உயர்கல்வி. மற்றொன்று அதிகாரம் - அரசியல் அதிகாரம். இவை இரண்டையும் பெறாத எந்த

சமூகத்தாலும் முன்னேற இயலாது என்பது திண்ணம். கல்வி அறிவு மேம்பாடு அடைகின்ற இந்த நேரத்தில் அரசியல் அதிகாரம் குறித்தும் அதிக அளவிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். அரசியல் அதிகாரத்தின் மூலம்தான் ஒரு சமூகத்தின் சமூக முன்னேற்றம் (நர்ஸ்ரீண்ஹப் ரங்ப்ச்ஹழ்ங்) முழுமை பெறும்.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் தங்களது தனித்தன்மையோடு அரசியல் களம் காண வேண்டும் என்றால் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் போராட்டத்தை கையில் எடுக்கவேண்டும். விகிதாச்சார பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எல்லா வகையிலும் போராட வேண்டும். இது சற்று கால தாமதம் ஆகத்தான் செய்யும் ஆனால் வேறு வழியில்லை. 60 ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறாததை 6 மாதத்தில் பெற வேண்டும் என்று நினைப்பது அறிவீனம்.

விகிதாச்சார பிரதிநிதித்துவம் தேவை என்ற கோரிக்கையை முஸ்லிம்கள் மட்டும் எழுப்பவில்லை என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்த நாட்டில் வாழும் எல்லா இனங்களும் எழுப்புகின்றன. தமிழகத்தில் அனைத்து சாதி பிரிவு, மதப் பிரிவு, அமைப்புகளும் ஆதரிக்கின்றன. இதை ஒருங்கிணைத்து முன்னெடுத்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் முஸ்லிம் சமூகம் இருக்கிறது. போராடாத சமுதாயம் வெற்றி பெறாது. இந்த நாட்டில் அடிப்படை வாழ்வாதார உரிமைகள் கூட போராடித்தான் பெற வேண்டியுள்ளது. தமிழக அளவில் 3.5 சதவீத இட ஒதுக்கீடும் கடுமையான போராட்டத்தின் விளைவுதான் என்பதை உணரவேண்டும்.

நம்முடைய சமூகப்பணிகள் அனைத்தும் அடுத்த தலைமுறையை மையப்படுத்தியே அமைய வேண்டும். தொலைநோக்கு பார்வையில்லாத, திட்டமிட்டு செயலாற்றாத எந்த ஒரு சமூகமும் முன்னேறியதாக சரித்திரம் இல்லை. இன்று நமது போராட்டத்தை தொடங்கினால் இன்ஷா அல்லாஹ் அடுத்த சட்டமன்ற தேர்தலுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். முஸ்லிம்கள் உள்ளடக்கிய எந்த பின்தங்கிய இனத்திற்கும் இன்றைய தேர்தல் முறையினால் எவ்வித பலனும் இல்லை என்பதை முதலில் முஸ்லிம்கள் முழுமையாக மனதில் நிறுத்த வேண்டும். இதை முழுமையாக மாற்ற வேண்டும். அல்லது பகுதி அளவிற்காவது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் நமது கோரிக்கையாக அமையவேண்டும்.

நாம் சந்திக்கின்ற நபர்கள் நாம் நடத்துகின்ற விழாக்கள், ஜமாத் கூட்டங்கள், ஜும்மா மேடைகள் என்று எல்லா விதங்களிலும் இந்த கோரிக்கையை வலி யுறுத்தவேண்டும். மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். போராட்டக் களத்திற்கு மக்களைத் தயார்ப்படுத்துவோம். இது இந்திய மக்களின் *ஜீவாதாரப் போராட்டம். அடுத்த தலைமுறைக்கான வாழ்வுரிமை போராட்டம். சமூகநீதி அறக்கட்டளை அதற்கான தளத்தை ஏற்பாடு செய்து வருகிறது.முதலில் சட்ட ரீதியான போரட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகின்றோம்.

## விகிதாச்சார பிரதிநித்துவம் என்றால் என்ன :

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் நடக்கின்ற தேர்தலில் ஆளும் முறைமையையும், தேசிய, பன்னாட்டு அளவில் கடமை ஆற்றவும் ஒரு கட்சியைத் தேர்ந்தெடுப்பதுதான் அரசியல் நடைமுறை ஆகும்.

* தொகுதி நலன்கள் ஒரு பக்கத்தில் இருந்தாலும் நாட்டின் முக்கியப் பிரச்சனைகள் கொள்கை கள்தான் நாடாளுமன்றத்தில் சட்டமன்றத்தில் ஒலி க்கின்றன. தொகுதிகள் என்பது மக்கள் வாக்குகள் அளிக்கும் வசதிக்காக அமைக்கப் பட்டது.

* தற்போதுள்ள நடைமுறையில் ஊரில் செல்வாக்கு உள்ள மனிதர் எளிதாக உருவாக்கப் படலாம். பண பலம் ஆள்பலத்தைக் வைத்து எளிதில் தேர்தலில்

வெற்றி பெறலாம். ஆனால் அரசியலில் தனிநபர் செல்வாக்கையும் புகழ்ச் சியையும் விகிதாசார வாக்கு உரிமை மூலம் களையலாம்.

* நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் தங்களுடைய கொள்கைகளைத் தேர்தல் அறிக்கையின் முன் வைத்து விகிதாசார வாக்குரிமை முறையில் தேர்தலில் போட்டி யிடலாம்.

* மாநில அளவில், தேசிய அளவில் அங்கீகரிக் கப்பட்ட கட்சிகள் எல்லாத் தொகுதிகளுக்கும் நிற்காமல் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சின்னங்கள் தான் வாக்குச்சீட்டில் இருக்கும். இதில் அந்த தனிநபருடைய பெயரோ முகமோ இல்லாமல் தேர்தல் காலத்தில் சுவரொட்டியில் கட்சிக் கொள்கை கட்சியின் தலைமையின் பெயர் மட்டுமே பிரசாரத்தில் இருக்கும். அத் தேர்தலில் போடப்படுகின்ற மக்களுடைய ஓட்டு கொள்கை அடிப்படையில் நிச்சயம் இருக்கும்.

* அத்தேர்தலில் மக்கள் அளித்த ஓட்டுக்களை மொத்தமாக எண்ணி ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த ஓட்டாக கருதி விகிதாச்சார அடிப் படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். உதாரணத்திற்கு ஒரு கட்சிக்கு 10 நாடாளு மன்றத்திற்கும் 100 சட்டமன்றத்திற்கும் விகிதாசார அடிப்படையில் இடங்கள் கிடைக்கின்றது என்றால் தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட கட்சியின் தலைமைக்கு நாடாளுமன்ற சட்டமன்றத்திற்கு முறையாக 10:100 என்ற விகிதாசாரத்தின்படி உறுப்பினர்களை கட்சித் தலைமை தேர்ந்தெடுத்து அனுப்பும்படி தாக்கீது அனுப்பும். அதன் அடிப்படையில் குறிப்பிட்ட கட்சி தலைமை உண்மையான மக்களுடைய பிரதிநிதியாக கருதப்படும் நேர்மையானவர்களை 10:100 என்ற அடிப்படையில் நாடாளுமன்ற சட்டமன்றத்திற்கு எம்.பி., எம்.எல்.ஏவாகத் தேர்ந்தெடுத்து பட்டியலை அனுப்பவேண்டும். அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டவர்கள் குறிப்பிட்ட பதவிக்குத் தகுதியுடையவர் ஆவார்கள்.

* பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படு கின்ற நபர்களை கட்சியின் மேலிடம் முற்றிலும் விவாதித்து நன்கு பரிசீலனை செய்து அனுப்பப் படும்போது பதவிக்குச் செல்கின்றவர்கள் கட்சிக்கு விசுவாசியாக இருக்கின்ற வகையிலும், தவறு செய்யும் எந்தப் பிரதிநிதியும் கட்சித் தலைமை உடன் அழைக்கும் வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும்.

* திரும்ப அழைக்கப்பட்டவர்களுக்குப் பதிலாக அதே கட்சியைச் சேர்ந்த வேறு ஒரு நபரை அனுப்புகின்ற வாய்ப்புகள் இருக்க வேண்டும். உறுப்பினர் பதவிக்காலத்தில் காலமானாலும் வீணாக இடைத்தேர்தல் நடத்தாமல் குறிப்பிட்ட கட்சியிலிந்து வேறு ஒருவரை அனுப்பலாம்.

* இதனால் அரசியல் கிரிமினல்கள், ஊழல் பெருச்சாளிகள் நாடாளுமன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் பொறுப்புக்கு வருவதை எளிதாகத் தடுக்கலாம். அரசியலில் கிரிமினல்குற்றவாளிகள் கலந்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டு மிகவும் பலமாக இருக்கிறது. சமீபத்தில் நாடாளு மன்றத்தில் வைக்கப்பட்ட வோரா கமிஷன் அறிக்கையும் இந்திய அரசியலில் கிரிமினல் குற்றவாளிகளால் நாடு புரையோடிவிட்டதென்ற நிலையையும் எடுத்துக் கூறியிருக்கிறது. கட்சி மாறும் தடுப்புச் சட்டத்தைவிட விகிதாசார வாக்குமுறை வந்தால் கட்சி மாறுவதை அறவே ஒழித்துவிட முடியும். தேர்தலில் திறமை யானவர்கள் நேர்மையானவர்கள் எளிதாக நாடாளுமன்ற சட்டமன்றத்திற்குச் செல்ல இந்த முறையில் வாய்ப்புகள் இருக்கின்றன.

* கட்சிகளின் தேர்தல் காலச் செலவினங்கள், அவசியமற்ற, ஆர்ப்பாட்ட தேர்தல் பிரசாரத்தைக் கட்டுப்படுத்தி, தேர்தல் பிரசாரத்தை எளிமைப் படுத்தலாம். ஓட்டுக்காக பணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படாது. தேர்தல் காலத்தில் கலவரங்கள், மக்களுக்கு ஏற்படும் பீதிகள் இந்த முறையால் தடுக்கப்படலாம்.

* இந்தியா போன்ற பல்வேறு மொழிகள் இனங்கள் கொண்ட சுவிட்சர்லாந்து நாட்டில் விகிதாசார வாக்குரிமை நடைமுறையில் இருக்கிறது. விகிதாசார வாக்குரிமை, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, சுவீடன், இத்தாலி, டாஸ்மேனியா, மால்டா, ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகளில் இந்த முறை நடைமுறையில் இருக்கிறது.

* 1961ஆம் ஆண்டு டிசம்பர் 16ல் கோவையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப் பட்டு 17-ம் தேதி கோவை தேர்தல் சிறப்பு மாநாட்டில் அண்ணாவால் வெளியிடப் பட்ட தேர்தல் அறிக்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். ராம் மனோகர் லோகியாவும் இதையே வலியுறுத்தினார்.

* இந்திய சட்டக்கமிஷன் (அளவில்) விகிதாசார முறையைப் பின்பற்றுவதற்கு யோசனை கூறியுள்ளது. ஆனால் நம் நாட்டில் பல அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் வெற்றிக்குத் திட்டங்களையும், கொள்கைகளையும் மட்டுமின்றி, வேட்பாளர்களுக்கு உள்ள செல்வாக்கையும் முக்கியமாகக் கருதுவதால் இந்த முறையை ஏற்க மாட்டா. எனவேதான் சட்டக் கமிஷன் நேரடித் தேர்தல் முறை, விகிதாசார முறையை யோசனையாகக் கூறியுள்ளது.

* மக்களவைக்கும் சட்டப் பேரவைகளுக்கும் இப்போதுள்ள தேர்தல் முறையை அப்படியே வைத்துக்கொண்டு, இவற்றில் கூடுதலாக 25 சதவீத இடங்களை உருவாக்கி இந்த இடங்களை பொதுத் தேர்தலில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசார அடிப்படையிலாவது நிரப்ப வேண்டும் என்பது ஆணையத்தின் யோசனை. பொதுத் தேர்தலின் போது இந்தக் கூடுதல் இடங்களுக்குத் தங்கள் வேட்பாளர் களை அரசியல் கட்சிகளின் தனித்தனிப் பட்டியல்களில் அறிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும்.

* ஜெர்மனியில் இருப்பதுபோல 4 சதவீதம் வாக்குகளுக்குக் குறைவாகப் பெறும் கட்சியைச் சட்டமன்றத்தில் இடம்பெறத் தகுதியற்றதாக அறிவிக்கலாம். இதனால் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை வரம்பின்றிப் பெருகுவதை விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் மூலம் தடுக்கலாம். படிப்படியாக இரண்டு அல்லது மூன்று கட்சி முறை உருவாகும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மக்கள் பங்கெடுப்பு முழுமையாக இருக்கும். ஒரு ஓட்டுகூட சிதறாது. மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற நேர்மையான பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்குச் செல்ல விகிதாசாரப் பிரதிநிதித்துவ வாக்குரிமை பயன்படும்.

CMN சலீம்